**<u>கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011ன் கீழ்</u>**

**<u>கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் (CZMP) தயாரித்தல் – சுருக்கம்</u>**

கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011ன்படி, மைய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவ நிலை மாற்றம் துறையின் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் தமிழகத்திற்கான கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் தயாரிக்கும் பணி சுற்றுச்சூழல் துறைக்கு வழங்கப்பட்டது. அதன்படி நீடித்த கடற்கரை மேலாண்மைக்கான தேசிய மையம் (NCSCM), சென்னை, என்ற மைய அரசின் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனத்திற்கு இத்திட்டம் தயாரிக்கும் பணி வழங்கப்பட்டு, கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011 வழிமுறைகள் படி, தமிழகத்திற்கான வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையின் இணைப்பு 1, பத்தி IV(a) ன் படி, தமிழகத்திற்கான வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் குறித்து அரசுத் துறைகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், உள்ளூர் சமூகங்கள், பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகளை அறிய 19.02.2018 அன்று சுற்றுச்சூழல் துறையின் இணையதளத்திலும் (http://www.environment.tn.nic.in) மற்றும் இத்துறையின் ENVIS மையத்தின் இணையதளத்திலும் (http://www.tnenvis.nic.in) வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டமானது 1:25000 என்ற உருவளவில், தமிழகத்திலுள்ள 13 கடலோர மாவட்டங்களுக்கான 115 உத்தேச கடலோர மண்டல மேலாண்மைத் திட்ட வரைபடங்கள் கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–I (சூழல் நுட்பப்பகுதி), கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–II (போதுமான வளர்ச்சியடைந்த பகுதி), கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–III (வளர்ச்சியடையாத பகுதி) மற்றும் கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–IV (நீர் பகுதி) களில் அமையும் நில புல எண். விபரங்களுடன் கீழ்க்கண்ட வரையறைகளின் அடிப்படையிலும் மற்றும் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011ன் வரையறைகளுக்குட்பட்டும் தயாரிக்கப்பட்டுள்ளது.

<u>கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011</u>

பத்தி 7: கடலோரப் பகுதி மற்றும் கடல் நீரைப் பேணும் பொருட்டும், பாதுகாக்கவும் கடற்கரைக் கட்டுப்பாட்டுப் பகுதி கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(I): <u>CRZ-I</u>

அ. கடலோரத்தின் ஒருமைப்பாட்டினை நிலைநிறுத்துவதில் முக்கியப்பங்காற்றும் சுற்றுச்சூழியல் கூர்நுட்ப மற்றும் உயிரின அம்சங்கள்

| | |
|---|---|
| I | 1000 ச,மீ பரப்பளவுக்கு மேல் உள்ள சதுப்புநிலப் பகுதிகளில் 50 மீ. இடைவெளி (buffer) |
| II | பவளப்பாறைகள் மற்றும் தொடர்புடைய உயிரினப் பல்வகைமை |
| III | மணல்மேடுகள் |
| IV | உயிரியல் இயக்கமுள்ள, கடலலையின் உச்ச ஏற்றத்தின் போது கடல்நீரால் சூழ்ந்து கொள்ளப்படும் சமதள சதுப்பு நிலப்பகுதி |
| V | வன உயிரினங்கள் (பாதுகாப்பு) சட்டம் 1972, காடுகள் (பாதுகாப்பு) சட்டம் 1980 அல்லது சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986 ஆகியவற்றின் கீழ் பாதுகாக்கப்பட்ட தேசிய பூங்காக்கள், கடற்பூங்காக்கள், சரணாலயங்கள், காடுகள், வன உயிரினங்கள் வாழுமிடங்கள் மற்றும் இதர பாதுகாக்கப்பட்ட பகுதிகள் |
| VI | உப்பளங்கள் |
| VII | கடலாமைகள் உறைவிடங்கள் |
| VIII | நண்டுகள் வாழ்விடம் |
| IX | கடற்புல் பரப்புகள் |
| X | பறவைகள் உறைவிடங்கள் |
| XI | புராதன மற்றும் பாரம்பரிய முக்கியத்துவ இடங்கள் |

ஆ. தாழ்வலைக்கோடு மற்றும் உயரலைக் கோடுகளுக்கிடையே உள்ள பகுதி.

II) CRZ-II கடல்வரை வளர்ச்சியுற்ற பகுதிகள்

விளக்கம்: வளர்ந்த பகுதி என்ற பொருளுக்கு நகராட்சி அல்லது சட்டரீதியாக நகரம் எனக் குறிப்பிடப்படும்படியாக கட்டடங்களும், வடிநீர்க் கால்வாய், அணுகு சாலைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளான குடிநீர் மற்றும் கழிவுநீர் வசதிகளும் அமையப் பெற்றதாகும்.

III) CRZ-III குலைக்கப்படாத பகுதிகளும், CRZ-I மற்றும் CRZ-IIக்குட்படாத நாட்டுப்புறத்திலுள்ள வளர்ந்த மற்றும் வளர்ச்சியடையாத கடலோரப் பகுதிகளும் மற்றும் நகராட்சி எல்லைக்குட்பட்ட அல்லது சட்டரீதியாக நகரம் எனக் குறிப்பிடப்படும் பகுதிக்குள் அமைந்துள்ள, ஆனால் போதுமான வளர்ச்சியடையாத பகுதிகள்

IV) CRZ-IV தாழ்வலைக் கோட்டிலிருந்து 12 கடற்கல் தொலைவு வரையுள்ள நீர்ப்பகுதி மற்றும் நீர்நிலைகளைப் பொறுத்து இரண்டு தாழ்வலைக் கோடுகளுக்கிடைப்பட்ட நீர்ப்பகுதி.

V) V – சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளுக்கான கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்

சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சட்டம், 1986ன் கீழ் அடையாளங்காணப்பட்ட, மன்னார் வளைகுடா போன்ற நெருக்கடிக்காளாகியுள்ள கடலோரச் சுற்றுச்சூழல் மற்றும் உள்ளூர் மக்கட்சமூகம் எதிர்கொண்டுவரும் சிரமங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், சிறப்புச் சலுகை தேவைப்படும் பகுதிகள் மற்றும் மீனவமக்கள் உள்ளிட்ட உள்ளூர் மக்கட்சமூகத்தின் பங்களிப்புடன் நிருவகிக்கப்படும் பகுதிகள்.

எனவே, நிறுவனங்கள், பொதுமக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து பிரிவினரும் வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் குறித்த தங்களின் ஆலோசனைகள்/ஆட்சேபனைகள் இருந்தால் இத்திட்டம் இணையதளத்தில் வெளியிடப்பட்ட தேதியில் இருந்து 45 நாட்களுக்குள் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுத்து மூலம் இத்துறைக்கு 06.04.2018க்குள் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.